பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 1 செவ்வாய்க்கிழமை (17-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 252

புலிகளின் கொலை பட்டியலில் அடுத்த பிரமுகர் காமினியாம்!

தேசிய உளவுப் பணியகத்துக்கு தகவல்

கொழும்பு, ஆக. 17

விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவின் பெயர் முதலாவது இடத்தை பெற்றிருப்பதாக கடந்த வாரம் தேசிய உளவுப் பணியகத்துக்குத் தகவல் கிடைத்தது.

இந்த விஷயம் சென்ற 10 ஆம் திகதி காமினி திஸநாயக்காவுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

—இவ்வாறு "சண்டே ரைம்ஸ்" அரசியல் செய்தியாளர் தமது அரசியல் விமர்சனத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி தகவல் தேசிய உளவுப் பணியகத்தால் உடனடியாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் மித்ரா ஆரியசிங்காவுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவர் அதனை அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவுத் தலைவரான பிரதிப் பொலீஸ் மா அதிபர் டி. என். எஸ். பெரேராவுக்கு அறிவித்தார்.

இக்கொலை பயமுறுத்தலை காமினிக்கு உத்தியோகப்பற்றற்ற முறையில் தெரிவிக்க பொலீஸ் தீர்மானித்தது. அதற்கிணங்க பிரதிப் பொலீஸ் மா அதிபர் பெரேரா தமது காலஞ்சென்ற மைத்துனரான ஹர்ஷா அபயவர்தனாவின் (முன்னாள் ஐ.தே.க. பொதுச் செயலாளர்) மனைவிக்கு இத்தகவலைத் தெரிவித்து, அதனை

(3 ஆம் பக்கம் பார்க்க)

இரு கட்சி இணைப்பைத் தடுக்கவே காமினியை ஒழித்துக் கட்டும் முயற்சி

கொழும்பு, ஆக. 17

ஐக்கிய தேசியக் கட்சி — ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைப்பைத் தடுக்கும் உத்தி ஒன்றை விடுதலைப் புலிகள் தயாரித்து இருப்பதாகத் தெரிகிறது.

'சண்டே ரைம்ஸ்' அரசியல் செய்தியாளர், "இணைப்புக்கு எதிரான விடுதலைப் புலிகள் குண்டு" என்ற தலைப்பிலான தமது கட்டுரையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அழுத்தத்தைக் கொடுக்கும் நோக்கில் — அரசைப் பலவீனப்படுத்துவதற்காக — புதிய தாக்குதல் ஒன்றுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையை விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கில் ஆரம்பித்திருக்கின்றனர்.

பலமான அரசாங்கம் இல்லாது இருப்பதை உறுதிப்படுத்துவதே விடுதலைப் புலிகளின் நோக்கமாகும்.

தெற்கில் தலைமைத்துவத்தில் இடைவெளி ஒன்றை ஏற்படுத்துவதே விடுதலைப் புலிகளின் எண்ணமாகும். இதனை அடைய ஐ.தே.க.— ஜ.ஐ.தே.மு. இணைப்பை தடுக்க வேண்டும்.

தேசிய தலைமைத்துவத்தை அழித்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் போது தென் பகுதியில் அரசியல் சக்திகள் ஐக்கியப்படும் என்பதை விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கவில்லை.

இந்த நிலையில் ஐ.தே.க.

[2 ஆம் பக்கம் பார்க்க]

பேச்சை மீள ஆரம்பிக்கவே ஹமீத்திற்கு முந்திய பதவி?

கொழும்பு, ஆக. 17

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காகவே ஏ. ஸி. எஸ். ஹமீத் திரும்பவும் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

1977 ஆம் ஆண்டு முதல்— 11 வருடகாலம் — ஜே. ஆரின் காலத்தில் வெளியுறவு அமைச்சராக உலக வலம் வந்தவர் ஏ.ஸி.எஸ் ஹமீத்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் வெளிவிவகாரக் கொள்கை ஜனாதிபதி செயலகத்தால் நேரடியாகக் கையாளப்பட்டது. சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாக ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க ஆலோசகர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

அவ்வேளை —

விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்திய அரச தரப்புக் குழுவுக்கு அமைச்சர் ஹமீத் தலைமை தாங்கினார்.

யுத்தம் மீண்டும் ஆரம்பமாகிய பின்னர் அவர் அடிக்கடி லண்டனுக்கும், ஏனைய ஐரோப்பிய தலைநகரங்களுக்கும் மேற்கொண்ட விஜயங்கள் வெளிநாட்டில் உள்ள அமைப்புக்கள் மூலம் அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருக்கிறார் என்ற பேச்சுப் பரவுவதற்கு வழி செய்தது.

இப்போது மீண்டும் ஐந்து ஆண்டுகளின் பின்னர் முக்கிய அமைச்சுப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த மாற்றமும், எம்.எல்.எம். அபுசாலியை அமைச்சர

[2 ஆம் பக்கம் பார்க்க]

டி.பி., ரணில், ஜே.ஆருடன் றொனி பல சுற்றுப் பேச்சு!

கொழும்பு, ஆக. 17

கொழும்பு திரும்பி வந்த முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல், முன்னர் அறிவிக்கப்பட்டபடி லண்டன் திரும்பவில்லை.

அதற்குப் பதில் கொழும்பில் தங்கியிருந்து அரசாங்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதில் அவர் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தம்பதியினருக்கு இரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்த றொனி டி மெல், ஜெயவர்த்தனாவுடன் நீண்ட பேச்சு நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

பின்னர் றொனி அலரி மாளிகைக்கு விஜயம் செய்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சுகள் நடத்தினார்.

பிறகு ஜனாதிபதி விஜேதுங்காவுடன் ஜனாதிபதி செயலகத்தில் இரு மணி நேரம் அவர் பேச்சு நடத்தினார்.

அதே தினம் மாத்தறை வெரகெஹன விகாரையில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட றொனி டி மெல் அவ்வைபவத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி விஜேதுங்காவுடன் மீண்டும் ஒரு சுற்று நீண்ட பேச்சு வார்த்தையை நடத்தினார்;

இச் சந்திப்புக்கள் எல்லாம் றொனி டி மெல்லுக்கு, ஜனாதிபதி விஜேதுங்காவின் அரச சார்பாக அடுத்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமா என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளன.

(உ-எ)

காங்கேசன் ஆலையை மூடும் முடிவில் மாற்றம் இல்லை!

ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜருக்கு பதில்

யாழ்ப்பாணம், ஆக. 17

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன தொழிற்சாலையை மூடும் திட்டத்தில் மாற்றம் எதுவுமில்லை

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை பொதுத் தொழிலாளர் சங்கத்துக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜருக்கு, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் பதில் அனுப்பியிருக்கிறார்.

சிமெந்து தொழிற்சாலைப் பொதுத் தொழிலாளர் சங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்தப் பதிலிலேயே ஆலையை மூடும் திட்டத்தில் மாற்றம் ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"ஜனாதிபதிக்கு தாங்கள் அனுப்பிய மகஜர் தொடர்பாக இப்பதிலை அனுப்புகின்றேன்.

தாங்கள் ஊழியர்களுக்கு இதுவரை காலமும் சம்பளம் வழங்க, காலி, புத்தளம் தொழிற்சாலைகளின் வருமானமே பயன்படுத்தப்பட்டன.

ஆனால் தற்சமயம் அத் தொழிற்சாலைகள் மக்கள் மயப்படுத்தப்பட்டு விட்டன. அதனால் காங்கேசன் ஊழியருக்கு தொடர்ந்து சம்பளம் வழங்க முடியாதுள்ளது.

மேலும் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு நிதி செலவிடப்படவேண்டியுள்ளதாலும் —

தற்போதைய சூழ்நிலையில் காங்கேசன் தொழிற் [illegible]

(3 ஆம் பக்கம் பார்க்க)

மற்றொரு யுத்தகைதி புலிகளால் விடுவிப்பு!

மனிதநேய அடிப்படையில் தலைவர் வழங்கிய உத்தரவு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 17

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள சிங்கள யுத்தக் கைதிகளில் மற்றொருவர், தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

மனிதாபிமான அடிப்படையில் தலைவர் இந்த முடிவை எடுத்தார் என்று "புலிகளின் குரல்" வானொலி தெரிவித்தது.

இதுவரை மொத்தம் ஏழு போர்க் கைதிகளை மனிதநேயத்தின் அடிப்படையில் தலைவர் விடுதலை செய்துள்ளார் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

நேற்று விடுதலை செய்யப்பட்ட கைதி மாத்தளையைச் சேர்ந்த எல். டி. எஸ். ஸி. பெரேரா.

இவரது மனைவியான சுனீத்திரா தாய்மை அடைந்து இருப்பதாலும்—

யாழ்ப்பாணத்தில் தனது கணவரை விட்டுச் செல்ல மறுத்து, தனது குடும்பப்பிரச்சினைகளை விளக்கி தலைவருக்கு கடிதம் எழுதி தார்மீ

(3 ஆம் பக்கம் பார்க்க)

இரவில் வட்டமிட்ட விமானம்

யாழ்ப்பாணம், ஆக. 17

நேற்றிரவு 9.45 மணி முதல் 15 நிமிட நேரம் யாழ். நகரை அண்டிய பகுதிகள் மீது வட்டமிட்ட புக்காரா விமானத்தினால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

யாழ். நகர் மற்றும் கரையோரப் பகுதிகள், நல்லூர், மானிப்பாய், கோப்பாய், நாவற்குழி பகுதிகள் மீது புக்காரா விமானம் பறந்தது.

கொட்டடி, நாவாந்துறை, குருநகர் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலர் இரவோடு இரவாக ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்துக்குள் இடம்பெயர்ந்தனர். (உ-9-15)

பாதுகாப்பு அமைச்சராக அமரதுங்க?

கொழும்பு, ஆக. 17

அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர்களாக நியமிக்கப்படவிருக்கும் ஜோன் அமரதுங்காவுக்கு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சு வழங்கப்படலாம் என்றும்—

போல் பெரேராவுக்கு நிதி ராஜாங்க அமைச்சு வழங்கப்படலாம் என்றும் "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

பதுளையில் தமிழர் கைது

கொழும்பு, ஆக. 17

வடபகுதி இயக்க நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பதுளை மாவட்டத்தில் உள்ள கந்தகெதர தமிழ் பாடசாலையைச் சேர்ந்த நான்கு மாணவர்களும், ஆசிரியர் ஒருவரும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

அதே பாடசாலையைச் சேர்ந்த ஏனைய ஆறு ஆசிரியர்களும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று ஊவா மாகாணத்திலும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது தொடர்வதாகவும் —

இதனால் தமிழ் இளைஞர்களிடையே அச்சமும், அமைதியின்மையும் நிலவுவதாகவும்—

இதனை மாவட்ட எம். பி. திரு. [illegible] அதிபருக்கு புகார் செய்துள்ளனர். (உ-8)

விடுதலைப் புலிகளின்

போராட்டம் வெற்றி பெற வேண்டுகிறார் யுத்தக் கைதி

யாழ்ப்பாணம், ஆக. 17

"விடுதலைப் புலிகளின் போராட்டம் வெற்றி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்."

— இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் பாதுகாப்பில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதியான பெரேரா.

புலிகளின் குரலுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

தலைவர் வே. பிரபாகரனின் கருணையாலும் மனிதநேயத்தாலுமே எனக்கு விடுதலை கிடைத்தது. அதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கொழும்பு சென்றதும், ஏனைய 32 யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பான முயற்சியில் ஈடுபடுவேன்.

நான் ஒரு கிறிஸ்தவன் என்ற முறையில் இவ்விடயம் குறித்து ஆயர்களுடன் பேசி நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப் போகிறேன்.

இருபது வருடங்களுக்கு மேல் பொலீஸில் பணியாற்றி விட்டதால் கொழும்பு சென்றதும் பொலீஸ் சேவையில் இருந்து ஓய்வு பெறப் போகிறேன். — இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார்.

(உ-3)

ரஷ்ய விமான கொள்வனவு உடன் நிறுத்த உத்தரவு

கொழும்பு, ஆக. 17

விமானப்படைக்கு ரஷ்யாவில் இருந்து வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த எம். ஐ 8 ரக விமான கொள்வனவை உடனடியாக நிறுத்தி, சர்வதேச ரீதியிலான கேள்விப் பத்திரங்களைக் கோருமாறு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க பாதுகாப்பு அமைச்சருக்கு அவசர உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவில் இருந்து எம்.ஐ 8 ரகத்தைச் சேர்ந்த மூன்று தாக்குதல் விமானங்களை கொள்வனவு செய்ய விமானப் படையின் சிபார்சின் பேரில் பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்திருந்தது. எதிர்வரும் அக்டோபர் மாத

3 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கில் பணி புரிய 3 புதிய டி.ஐ.ஜிக்கள் மறுப்பு

புதிதாக நியமிக்கப்பட்ட 12 பிரதிப் பொலீஸ் மா அதிபர்களில் மூவர் வடக்கு— கிழக்குப் பகுதிகளில் கடமை புரிய மறுத்து விட்டனர்.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

யுத்த முனைப் பகுதிகளில் பணிபுரியக் கூடியதாக தங்களின் உடல்நலம் இல்லை என்று தங்களின் மறுப்புக்கு அவர்கள் காரணம் காட்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை —

புதிதாக நியமிக்கப்பட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர்களில் ஒருவருக்கு அடிப்படை உரிமை மீறல் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது. இது போன்ற காரணங்களுக்காக பதவி உயர்வு பெற்ற சில பிரதிப் பொலீஸ் மா அதிபர்களின் நியமனங்கள் ரத்துச் செய்யப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது (உ-எ)

மோட்டார் ஊர்திப் பதிவு; நான்காம் கட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 17

மோட்டார் ஊர்திகள் பதிவு செய்வது தொடர்பான நான்காவது கட்ட நடவடிக்கைகள் இன்று முதல் இடம்பெறும் என்று போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

சங்கானை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள், தங்கள் மோட்டார் ஊர்திகளை கோண்டாவிலில் உள்ள மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதிக்கு எடுத்துச் சென்று இன்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை —

வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 3 மணி வரையும் சனிக்கிழமைகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரையும் பரிசோதனைக்கு உட்படுத்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரம்

வெளிவந்துவிட்டது

தோத்திரத்திரட்டு, கூட்டு வழிபாடு ரூபா 30/- (மலிவுப்பதிப்பு) அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-5658)

தவறிவிட்டது

15-8-93 அதிகாலை 3-00 மணியளவில் கொழும்பில் இருந்து யாழ். திரும்பும் போது எனது புதிய உடுப்புகளுடன் கூடிய உரப்பையொன்று அல்லிப்பளையில் கைதவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் வைத்திய கலாநிதி ஜி. ஜோர்ஜ் கபிரியேல் வைத்திய சாலை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6623)

இலவச திருமண சேவை

32 வயது, கார்த்திகை, ஆஸ்திரேலியாவில் Computer படிக்கும் மணப்பெண்ணுக்கு மணமகன் ஆஸ்திரேலியா/ இலங்கையில் தேவை. மணமகனை ஆஸ்திரேலியா அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி. (26960)

கண்ணொளி

கண்ணொளி துலங்கிட கரிசலாங்கண்ணி (கையாந்தகரை) தினமும் சாப்பிடுவோம். மிக்கவைற் நீல சோப் மேலுறை / சலவைத்தூள் பக்கற் பத்து (10) சேர்ப்பித்து ஒரு பதிகன்று பெறுங்கள். 'மிக்கவைற்' (சி-5591)

நல்லூரான் தேர்காண அலைமோதிய பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 17

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா மிகவும் பக்திசிரத்தையுடன் நேற்று நடைபெற்றது. நான்கு வீதிகளிலும் மக்கள் கடல்அலையாக பக்திப் பரவசத்துடன் முருக நாமங்களை ஆர்ப்பரித்து நிற்க, கந்தப்பெருமான் தங்கத்தேர் ஊர்ந்து அடியார்களுக்கு அருட்காட்சி அளித்தான்

வசந்தமண்டபப் பூசை காண்பதற்காக அதிகாலை 3 மணிக்கே பக்தர் வெள்ளம் கூடத்தொடங்கியது.

காலை 7.15 மணிக்கு வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமானின் தேர்உலா ஆரம்பித்தது.

மிதக்கும் பக்தர் கூட்டத்தின் மத்தியில் தேர் ஆடி அசைந்து, ஊர்ந்து காலை 8.30 மணிக்கு இருப்புக்கு வந்தது. பஜனைக் கோஷ்டிகள், காவடிகள், அங்கப்பிரதட்சணை என்பன பக்திமயமான சூழலை ஏற்படுத்தி நிற்க அடியார்கள் முருகனைத் தரிசித்தனர்.

பக்தர் வெள்ளத்தின் மத்தியில் பச்சை சாத்திய முருகன் மிதந்து சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நேற்றைய மக்கள் நெரிசலில் மயக்கமுற்றும் மற்றும் விதங்களிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவை, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், மாணவர் தொண்டர்கள், அமய சுகாதாரத் தொண்டர்கள் வேண்டிய உதவிகளைச் செய்து சிறப்பாகத் தொண்டாற்றினர்.

சனநெரிசலில் கீழேவிழுந்து கூட்டத்தில் மிதிபட்ட ஆனைக்கோட்டை வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை நித்தியானந்தன் (59 வயது) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மற்றும் பலருக்கு ஆலயச் சுற்றாடலில் அமைந்த சுகாதார நிலையங்களில் முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆலயத்துக்கு வந்த 15க்கும் மேற்பட்ட பறவைக்காவடிகளில் ஒன்று முறிந்து விழுந்ததால் காவடி எடுத்த அடியார் கீழே விழுந்து காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சனக்கூட்டத்தின் மத்தியில் பெண்மணி ஒருவரின் தாலிக்கொடி காணாமற்போய் பின்னர் மீட்கப்பட்டது.

ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட மோதிரம், பணப் பைகள் என்பன தொண்டர்களால் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

(அ-15-162-30)

இரு கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

— ஐ.தே.மு. இணைப்பு விடுதலைப் புலிகளுக்கு பேரழிவாக இருக்கும். இந்த இணைப்பு அரசாங்கத்தை ஸ்திரப்படுத்தும்; சிங்கள மக்களையும் ஐக்கியப்படுத்தும்.

தற்போது காமினி திஸநாயக்கா பிரிவினைப் போர் பற்றி அக்கறை செலுத்துகின்றார்; மக்களை ஒன்று திரட்டுவதிலும் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில், தங்களது அடுத்த நடவடிக்கைக்கு நேரம் வந்து விட்டது என்ற முடிவுக்கு விடுதலைப் புலிகள் வந்துள்ளனர் போல் தெரிகிறது. அந்த நடவடிக்கை காமினி திஸநாயக்காவை ஒழித்துக் கட்டுவது என்பதேயாகும்.

— இவ்வாறு அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஏ)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு யாழோசை மன்றம்

வழங்கும்

★ இசை விழா ★

இன்றைய நிகழ்வுகள்

இடம்: நல்லை ஆதீன மண்டபம்
நேரம்: மாலை 6 00 மணி முதல் 9 00மணி வரை

▣ 6.00 — 6.31 மணி:
கீழைத்தேச வாத்திய இசை
(யாழோசை மாணவர்கள்)
★ த. ஜெயமாலா — புல்லாங்குழல்
★ சி. தர்ஷினி — புல்லாங்குழல்
★ ப. சசிகலா — வயலின்
★ சி. அன்பரசி — வயலின்
★ ம. கௌரி — வயலின்
★ த. நாகேஸ்வரி — வயலின்
★ இ. குமரன் — வயலின்
★ க. முருகையா — மிருதங்கம்

▣ 6-30 — 6-45 மணி: உரைகள்
★ சிறப்புரை — திருமதி ஜெகதீசன்
(மாதர் மன்ற தலைவி)
★ பிரதம விருந்தினர் உரை —
திரு. இ. மகேந்திரன்
(கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர்)

▣ 6-45 — 7-30 மணி:
கிற்றாரில் கர்நாடக இசை
★ ஆனந்தி சண்முகநாதன் — கிற்றார்
★ எஸ். கமலதாஸ் — மிருதங்கம்
★ க. பிரபாகரன் — தபேலா

▣ 7-30 — 8-30 மணி: வயலின் சோலோ
★ பா. கண்ணன் — வயலின்
★ இ. துரைராஜா — மிருதங்கம்
★ க. முருகையா — தபேலா
★ எஸ். ஜெயா — தவில்

(ஈ-118)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
24 — 07 — 1947

அரக்கர் பிடியில்:
20 — 08 — 1990

சோ. கந்தையா இரவீந்திரன்

(வேலணை)
(ஆசிரியர் யா/வைத்தீஸ்வரா வித்தியாலயம்)

திதி: 17 — 08 — 1993

காலம் வரலாற்றில் கரைந்தது!
நீ (ங்கள்) மறைந்து......... போனது......!!
ஆண்டு மூன்றாகியதே!!!
எம் சுந்தர செல்வமே!
எம் (ங்கள்) நெஞ்சங்களிலே அழியாத...
நின் நினைவுகளுக்கு காணிக்கையாய்
கண்ணீர்ப் பூக்களை அர்ச்சிப்பதோடு
ஆத்மா சாந்தியடைய இறைவனின்
தாளை இறைஞ்சுகிறோம்.

குடும்பத்தினரும், உறவினரும்.

82/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(26963)

மூன்றாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

மலர்வு:
18 — 06 — 1933

உதிர்வு:
20 — 08 — 1990

தோலகட்டி - வயாவிளான்

அமரர் வைத்திலிங்கம் நடராசா

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி- கிழக்கு
பிரதேச சபை - அச்சுவேலி)

திதி: 17—08—1993

எங்கள் அன்பு அப்பாவே!
நிலவின் ஒளி அப்பா நீங்கள் இருக்கமட்டும்
நிலவின் ஒளிஅற்ற நீண்ட நாள்போல
இப்போது! உங்கள் ஆசிதான் எங்களைக் காக்குதப்பா!
மூன்றாண்டு சென்றாலும் உங்கள் கருணைதான் -
நெஞ்சத்தில் உருகுதப்பா!
ஆண்டுகள் செல்லச் செல்ல உங்கள் ஆசைகள் -
கற்பனைகள் நிறைவேறுதப்பா!

கந்தன் தீர்த்தத்தில் உங்கள் காலடியில் நின்று
கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

நீர்வேலி - உபதபாற் கந்தோர்,
நீர்வேலி.
(26947)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

யோசேப் வசந்தி

உயிர்ப்பு:
04—09 — 1972

யோசேப் மேரி மதிவதனி

உயிர்ப்பு:
07 — 02 — 1977

அழிப்பு: 17 — 08 — 1990

மாதாவினில் சென்று மகிழ்வோடு வாழ்கின்றீர்
மண்ணிலே விட்டிங்கு மனமுடைந்து வாழ்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அண்ணன்மார்.

இவானி வீதி,
[illegible]
(26941)

பேச்சை மீள ஆரம்பிக்க...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைக்குள் கொண்டுவந்ததும் தன்னுடைய கருத்தைப் பலப்படுத்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க எடுத்த நடவடிக்கைகளாகும் என வேறு சில விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

இந்த இருவரும்—ஹமீதும், அபுசாலியும் — "பிரிந்து சென்ற" காமினி அணியை மீண்டும் ஐ.தே.கவுடன் இணைத்து கொள்ள வேண்டும் என்ற ஜனாதிபதி டி. பியின் கருத்தை வலுவாக ஆதரிப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

கேக் ஐசிங் கண்காட்சி

ஜெய் மகால், இல. 7, கற்குளி ஒழுங்கை, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கேக் ஐசிங் கண்காட்சி அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 18, 19 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

(6427)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

சரவணையூர் பிரபல வர்த்தகர்
அமரர்

ஆறுமுகம் தியாகராசா

(சோதி)

மலர்வு:
28—02—1944

உதிர்வு
20—08—1990

திதி: 17 - 08 - 1993

பாதிவழி போகையிலே பரவையிலே அன்று
விதிவழியே போனீரே வேதனையில் எமை — ஆழ்த்தி
சோதியுட் சோதியாய் அமர்ந்திருக்கும் எந்தையே
தூவியே மலர்களை துதிக்கிறோம் இந்நாளில்!

ஆண்டு மூன்று அகன்றதுவே அமலனடிசேர்ந்து
விண்ணின் விளக்காய் விளங்கிடும் — குலவிளக்கே
மண்மிசை யாம் வாழ நல்வழி காட்டி வைத்தீர்
விண்மிசை வீற்றிருக்கும் எம் தோன்றாத் துணையே!!

கண்கண்ட தெய்வமே எந்நாளும் நினைந்து
கண்ணாரச் சொரிந்து கையாரத் தொழுது
வேண்டுதல் செய்கிறோம் வேலவனை நாளும்
வெண்பட்டு நிலவெனவே பெற்றிடவே சாந்தி!!!

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர், மாமன், மாமி,
மைத்துனர், மைத்துனிமார்;

காரைக்காடு,
கோண்டாவில் கிழக்கு,
இணுவில்.
(26972)

31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

யோகசௌந்தரி நகுலேஸ்வரன்

தோற்றம்:
04—10—1941

மறைவு:
18—07—1993

மன்றத்தின் அங்கத்தவராகவிருந்து முத்தமிழ் வளர்த்த பெருந்தகையே, முப்பது ஆண்டுகள் நற்பணி பல செய்தீர்! தையல் ஆசிரியையாக இருந்து பல் கலையும் கற்பித்தீர்! நிர்வாக உறுப்பினராய், உப தலைவராய், கோயில் மூகாமையாளராய் இருந்து சேவைகள் பல செய்து மாதர்க்கு வழிகாட்டினீர்; இல்லறம் சிறக்க நல்லறமாம் விருந்தோம்பல் செய்து மாதர்குல மாணிக்கமாக உங்களது சேவையை மன்ற வரலாற்றில் பசுமையாகப் பதித்து விட்டீர்கள். எங்கள் உள்ளங்களில் என்றும் நிலைத்திருப்பீர்கள்.

உங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள்,
ஞானசம்பந்தர் கலை மன்றம்.

புலோலி கிழக்கு,
(6224)

உதயன்

ஐ. நா. சபைக்கு தமிழர் விவகாரம்

தமிழீழ மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் இராணுவத் தாக்குதல்களை நிறுத்தவும், பொருளாதாரத் தடையை நீக்கவும் —

ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்று உலகத் தமிழர் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நாடுகளின் உதவியைக் கோரவுள்ளதாக ஜனாதிபதி இம்மாத ஆரம்பத்தில் மலேசியச்செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

ஆனால், அதன் பின்னர் —

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ நா. சபையின் மத்தியஸ்தத்தை நாட வேண்டும் என்று உலகளாவிய ஒத்துழைப்புக்கான அமைப்பு சமர்ப்பித்த ஆலோசனையை அவர் நிராகரித்து விட்டார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றம் மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதால் ஐ நாவின் மத்தியஸ்தம் — தலையீடு — தேவையில்லை என்று பிரஸ்தாப அமைப்பின் சார்பில் யோசனையை வகுத்த நோபல் பரிசு பெற்ற அறிஞர்கள் நால்வருக்கும் ஜனாதிபதி பதிலளித்திருந்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாகச் சணம் பித்தம், சணம் வாதம் என்ற நிலையிலிருக்கும் ஜனாதிபதி விஜேதுங்காவோ அல்லது அரசாங்கமோ அதனைத் தீர்ப்பதற்கு உருப்படியான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை என்பது மட்டும் திண்ணம்.

இராணுவத் தீர்வில் நாட்டம் கொண்டு அதன் ஊடாக மேலோங்கி தமிழர்களின் நலன்களுக்கு குந்தகமான ஒரு தீர்வை திணிப்பது அரசின் முழு நோக்கம். ஆனால் அதனையும் உடனடியாகச் செய்வதற்கு விருப்பமில்லை. இழுத்தடித்து இயன்றளவுக்குத் தமிழர்களைப் பலவீனமாக்கி அதன் பின்னரே இவ்வளவுக்கு சார்பான ஒரு திட்டத்தை (உலகத்தை ஏமாற்றுவதற்கு) ஒரு தீர்வாகக் காட்டுவதற்குச் சிங்களப் பேரினவாத அரசு விரும்புகிறது.

ஆகையால் இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்றாவது சக்தி தலையிடாமல் அல்லது மத்தியஸ்தம் செய்யாமல் நிலைமை சீரடையமாட்டாது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது;

மூன்றாமவர் — வெளியார் — என்னும்போது குறிப்பிட்ட ஒரு நாடோ அல்லது குறிப்பிட்ட உள்நோக்கத்துடன் சேர்ந்திருக்கும் நாடுகளின் குழுவோ மத்தியஸ்தத்துக்கு வந்தால் அவர்கள் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களின் நலன் கருதியே தமது சமாதானப் பணியைச் செய்வார்கள் என்று முற்றாக எதிர்பார்க்க முடியாது. 1987 ஆம் ஆண்டுப் பாடம் அதற்குநல்ல எச்சரிக்கை.

தனியான ஒரு நாடு அல்லது நாடுகளின் குழுக்களுடன் உலக நாடுகளின் கூட்டுச்சபையான ஐ. நா. சபையை ஒப்பிட்டால், அது பரவாயில்லை என்றே தோன்றுகிறது. எனினும் சோமாலியா, பொஸ்னியா பிரச்சினைகளில் ஐ. நா.வின் சமாதானத் தலையீட்டால் எழுந்துள்ள பாதகமான நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளாதிருக்க முடியாது. ஸ்ரீலங்கா அரசுடன் ஏற்பாடு செய்யப்பட்ட (Arranged) சமாதானத் தீர்வை ஐ. நா. அமுலாக்க முனையுமானால் அது இப்போதுள்ளதை விட நிலைமையை ஆபத்தாக்கியும் சிக்கலாக்கியும் விடும்!

எனினும் தமிழர் பிரதேசத்தில் உண்மையான நிலைவரத்தை உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்ல, ஸ்ரீலங்கா அரசாங்கத்தை அம்பலப்படுத்த ஐ. நா. சபையே பொருத்தமான அரங்காகும். குறிப்பாக உலக நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு வழங்கும் நிதி உதவி தமிழர்களை அழிக்கவும், அவர்களின் உரிமைப் போரை அடக்கவும் பயன்படுத்தப்படுகிறது என்பது உலகத்துக்குச் சொல்லப்பட்டே ஆக வேண்டும்.

இரு கப்பல்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஆக. 17

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த "குமண" "மெரினால்" கப்பல்களில் இருந்து ஒரே நேரத்தில் பொருள்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின.

"மெரினால்" கப்பலில் 900 மெற்றிக் தொன் அரிசியும்.

"குமண" கப்பலில் யாழ். செயலகத்துக்கான உணவுப் பொருட்கள் மற்றும் தனியாருக்கான பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

தபால் பொதிகள் எடுத்து வரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலய சுற்றாடலில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்.

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில்—

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி சொற்பொழிவு மாலை 6 மணி.

என். கே. பத்மநாதன் கே. ஆர். புண்ணியமூர்த்தி குழுவினர் மங்கள இசை மாலை 6-45.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோவிலில் 5-15—6-15 "தர்மர் பட்டாபிஷேகம்" எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்—

பிற்பகல் 2—3மணி வரை "அருள் நோக்கில் தீர்த்த நீர்" எனும் பொருளில் சிவஸ்ரீ கை.திருஞானசம்பந்தக் குருக்கள் சமயச் சொற்பொழிவு.

மாலை 5-30—6-30 மணி வரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி "திருப்பரங்குன்றில் திருக்கல்யாணம்" எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி—நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3—4-30 மணிக்கு கந்தபுராணபடனம்.

(க-111-126)

ஆய்வுக் கருத்தரங்கு

வட்டுக்கோட்டை, ஆக. 17

திட்டமிட்ட முறையில் கிராம வளங்களைப் பயன்படுத்துவதற்கான ஆய்வுக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையில் சங்கானை உதவி அரசாங்க அதிபர் செல்வி ரூபினி கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. (க-161)

தையல் பயிற்சி சான்றிதழ்

அகில இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியில் சித்தி அடைந்தோருக்கான சான்றிதழ்களை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சந்திரராசா அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வழங்கினார். (க-90)

புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காமினிக்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

உடனே திருமதி அபயவர்தனா காமினியின் உதவியாளரான பலிதா பெல்பொலவுக்கு அதனைத் தெரியப்படுத்தினார்.

இவ்வாறாகக் கொலைப் பயமுறுத்தல் பற்றிய செய்தி காமினிக்குத் தெரிவிக்கப்பட்டது.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் மித்திரா ஆரிய சிங்க பயமுறுத்தல் தகவல் கிடைத்த பின்னணி பற்றிய விவரங்களைப் பின்னர் காமினியின் உதவியாளர் பெல்பொலவுக்கு விவரமாகத் தெரியப்படுத்தினார். இது குறித்து காமினியை உஷார் படுத்த வேண்டியது தமது கடமை என்றும் அவர் கூறினார்.

—இவ்வாறு அரசியல் செய்தியாளர் தமது [illegible] கட்டுரையில் [illegible]ளார். (உ-எ)

முதலமைச்சர்களை நியமிப்பது தொடர்பான

மாகாண ஆளுநரின் தீர்மானம் நீதி விசாரணைக்கு உட்பட்டது

உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு ஆக. 17

மாகாண சபை ஆளுநர்களின் தீர்மானத்தை விசாரிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உள்ளது.

இவ்வாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா, நீதியரசர்கள் திஸ்ஸ பண்டாரநாயக்கா, மார்க் பெர்னாண்டோ ஆகியோர் இத்தீர்ப்பை ஏகமனதாக வழங்கியிருக்கின்றனர்.

தென் மாகாண சபை முதலமைச்சராக எம். எஸ் அமரசிறியையும், வடமேல் மாகாண சபை முதலமைச்சராக காமினி ஜயவிக்ரம பெரேராவையும் அந்தந்த மாகாண ஆளுநர்கள் நியமித்ததை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதும்—

இந்த மனுக்களை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், மாகாண ஆளுநர்களின் நடவடிக்கைகளை விசாரிக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உள்ளதா என்பது தொடர்பான அரசமைப்பு சிக்கல் எழுந்திருப்பதால் அதுபற்றி தீர்மானிக்கும் பொறுப்பை உயர்நீதிமன்றத்திடம் ஒப்படைத்திருந்ததும் தெரிந்தவையே.

இந்த அரசமைப்புச் சிக்கல் பற்றி விசாரித்த உயர்நீதிமன்றம்—

ஆளுநர்களின் நடவடிக்கைகளை விசாரிக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு உள்ளது என்றும்—

இதன் அடிப்படையில் மேற்படி இரு மனுக்கள் மீதான விசாரணைகளை தொடர்ந்து நடத்தும்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தைப் பணித்தும் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. [உ-எ-162]

பொதுக் கிணறு

மானிப்பாய் அரசடி விநாயகர் ஆலய முன்றிலில் வலி. தென்மேற்கு சனசவியத் திட்டத்தின் கீழ் அண்மையில் பொதுக்கிணறு ஒன்று வெட்டிப் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (க-90)

காங்கேசன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயல்படுத்த முடியாததாலும் —

தொழிற்சாலையை மூடுவதே ஒருவழியாகும்.

— இவ்வாறு அப்பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

மற்றொரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கக் காட்டுமாறு அவர் வேண்டிக் கொண்டதாலும்—மனிதாபிமான அடிப்படையில் இந்தப் போர்க் கைதியை விடுதலை செய்ய தலைவர் பணித்துள்ளார் என்று "புலிகளின் குரல்" மேலும் தெரிவித்தது.

நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் இந்தக் கைதியை உத்தியோக பூர்வமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பிஸட் சுவலிஸிடம் ஒப்படைத்தார்.

விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதியான பெரேராவும் அவருடைய மனைவி சுனித்ராவும் விடுதலைப் புலிகளின் பூரண பாதுகாப்புடன் பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கிருந்து அவர்கள் இருவரும் கப்பல் மூலம் பலாலி சென்று, பலாலியில் இருந்து அநுராதபுரம் புறப்பட்டனர். (உ-3-5-9-15-162-178)

மோட்டார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா போக்குவரத்துப் பிரிவினால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் உள்ளோரும், மூல ஆவணங்கள் இல்லாதவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும்—

பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் தமது குடும்ப அட்டைகளைத் தவறாது கொண்டு வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (த)

ரஷ்ய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்குள் விமானங்களை தருவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த விமானக் கொள்வனவில் "கமிஷன்" பெறப்பட விருப்பதாக பரவலான முறைப்பாடு அரசாங்கத்தின் மேலிடத்துக்கு கிடைத்ததையடுத்து, இக்கொள்வனவை உடனடியாக நிறுத்துமாறு [illegible] கப்பட்டது. (உ-3)

மணலாற்றுப் பகுதிக்கு புதிய படைத் தளபதி

ஆறாவது படையணி பகுதியின் பொறுப்பதிகாரியாக பிரிகேடியர் அசோகா ஜயவர்த்தனாவை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா நியமித்திருக்கிறார்.

இப்படைப்பிரிவு மணலாற்றுப் பகுதிக்கு பொறுப்பாக உள்ளது. இப்பகுதியிலேயே விடுதலைப் புலிகளிடம் அண்மையில் வீழ்ச்சியடைந்த மண்கிண்டிமலை (ஜனகபுர) இராணுவ முகாம் உள்ளது.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சியின் போது அங்கு பொறுப்பதிகாரியாக இருந்த பிரிகேடியர் பாலியவகே கிழக்கு பிராந்திய கட்டளைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். (உ-எ)

மன்னாரில் படையினர் மேலும் பின்வாங்கினர்

மன்னார் மாவட்டத்தில் மேலும் பல மைல் தூரப் பிரதேசத்தில் இருந்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

மாந்தை முதல் நானாட்டான் வரையான 20 மைல் நீளமான பிரதேசத்தில் இராணுவ வேலியை அமைத்திருந்த இராணுவத்தினர், நேற்று முன்தினம் அப்பகுதியில் இருந்து முற்றாகப் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

அடம்பனில் இருந்து உயிலங்குளம் வரையான பகுதிகளில் இருந்து முற்றாக இராணுவத்தினர் வெளியேறியிருந்தனர் என்பது தெரிந்ததே.

இப்பகுதிகளில் மூன்றுக்கும் கூடுதலான பிரதான முகாம்களையும், ஆறுக்கும் கூடுதலான மினி முகாம்களையும், இருநூற்று ஐம்பதுக்கும் அதிகமான காவலரண்களையும் ஏற்படுத்தி இராணுவ வேலி ஒன்றை படையினர் அமைத்திருந்தனர். (உ-3)

மீண்டும் அடுத்த மாதம் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, ஆக. 17

அடுத்த மாதம் இன்னொரு அமைச்சரவை மாற்றம் இடம் பெறலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைந்ததும் காமினி திஸநாயக்கா, ஜி. எம் ப்ரேமச்சந்திரா ஆகியோர் அமைச்சர்களாக அப்போது நியமிக்கப்படுவர்.

— இவ்வாறு அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை புதிதாக அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட டிரோன் பெர்னாண்டோவும் எம். எல். எம். அபுசாலியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதை ஆதரிப்பவர்கள் என்றும் —

இவர்கள் இருவரையும் சேர்த்துக் கொண்டதன் மூலம், அமைச்சரவையில் இணைப்புக்கு ஆதரவான அமைச்சர்களின் எண்ணிக்கையை ஜனாதிபதி அதிகரித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-எ)

ஈழ அகதிகளுக்கு ஆதரவாக

உண்ணாவிரதமிருந்த சட்டத்தரணி கைது

சென்னையில் சம்பவம்

கொழும்பு! ஆக. 17

தமிழகத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை ஆட்சேபித்து கடந்த வியாழனன்று சென்னையில் ஒரு நாள் உண்ணாவிரதத்தை ஒழுங்குசெய்த வழக்கறிஞர் ஆர். கே. சிவலிங்கத்தை தமிழ்நாடு பொலீஸார் கைது செய்து தனிச் சிறையில் காவலில் வைத்துள்ளனர்.

அவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டதைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டதாக சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தோட்டத் தொழிலாளரின் உரிமைகளுக்காகப் போராடிவந்த இவர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பீடத்துடன் நன்கு பரிச்சயமானவர் என்றும் சொல்லப்படுகிறது.



எழில் கொண்ட நல்லை முருகா!

எங்கு பார்த் தாலுமுன் னெழிலுருத் தோன்றுதே
ஏகாந்த னான முருகா!
எங்குகேட் டாலுமுன் னெழிற்பெய ரொலிக்குதே
ஏகம்ப னான முருகா!
எங்குமோந் தாலுமுன் இன்மணங் கமழுதே
எந்தையே யான முருகா!
எங்குசார்ந் தாலுமுன் எழில் ஞானஞ் சாருதே
எழில் கொண்ட நல்லை முருகா!

— எம். கே. இளையப்பு

குப்பையை புதைத்தவன் கோபுரம் கட்டுவான்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

செல்வன் இராசேந்திரம் கஜேந்திரன்

செல்வன் இராசேந்திரம் கஜேந்திரன் அகால மரணமானார். இவர் இராசேந்திரம் (இளைப்பாறிய நில அளவையாளர் — சவூதி அரேபியா), ஜெயலட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், கயேந்திரன், ஜெயந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் நேற்று மாலை புலோலி கரும்பன் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி ஜெயலட்சுமி இராசேந்திரம்
(தாய்)

மாயக்கை - சாந்தியூர்,
புலோலி.
(கி/5596)

திருமதி விஜயராணி லோகநாதன்

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி விஜயராணி லோகநாதன் (யாழ் போதனா வைத்தியசாலை) 16 - 8 - 93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் லோகநாதனின் அன்பு மனைவியும், திருக்குமரனின் அன்புத் தாயாரும், தும்பளையைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை சிவபாக்கியத்தின் அன்பு மகளும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (17 - 8 - 93) செவ்வாய்க்கிழமை 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
லோகநாதன் (கணவன்)

551/3 காங்கேசன்துறை வீதி,
மில்க்வைற் அருகாமை
யாழ்ப்பாணம்.
(26965)

அருணாசலம் நடராசா

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது ஒட்டுமடம் செழியன் வீதியில் வசித்தவருமான அருணாசலம் நடராசா நேற்று 16 - 8 - 93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் இலட்சுமி ஆகியோரின் மூத்த மகனாரும், பூமணியின் அன்புக் கணவரும், சிவனேசன் (பிரான்ஸ்), சாந்தரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலிங்கம், சிவபாக்கியம், நல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னையா, இராமாசி ஆகியோரின் அன்பு மருமகனும், இராசம்மா, காலஞ்சென்ற ஏகாம்பரம், தம்பிஐயா (கொழும்பு), அன்னம்மா, குணரத்தினம் (புங்குடுதீவு), சபாரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், குலநாயகத்தின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-8-93) காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:
ஆ. அன்னலிங்கம்
(சகோதரர்)

செழியன் வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
(26966)

முத்துத்தம்பி கைலாசபிள்ளை

(உரிமையாளர், மைசூர் அரிசி ஆலை சதுமலை)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி கைலாசபிள்ளை நேற்று [16 - 8 - 93] காலமாகிவிட்டார்.

இவர் வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துத்தம்பி தம்பதிகளின் மகனும், இராசலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த திரு. திருமதி சாந்தலிங்கத்தின் மருமகனும், அன்பழகன் (நோர்வே), வளர்மதி [நோர்வே], கலைவாணி (கொழும்பு), பாரதிதாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பகீரதனின் (நோர்வே) மாமனும், ஜனசாவின் பேரனும், குலசேகரம், காலஞ்சென்ற ஞானாம்பிகை, செல்லம்மா, மகேஸ்வரி சாவித்திரி ஆகியோரின் சகோதரரும், பாலச்சந்திரன், தவமலர், அருணகிரி, தேவராணி, தனலெட்சுமி, இரங்கநாயகி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 17 - 8 - 93 இன்று பிற்பகல் 4 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி கைலாசபிள்ளை இராசலெட்சுமி
[மனைவி]

மைசூர் அரிசி ஆலை,
சதுமலை
[26969]

பிரம்ம ஸ்ரீ சிவகடாட்சக் குருக்கள் முத்துச்சாமி ஐயர்

(ஆசிரியர் அராலி வடக்கு)

வடகோவையம்பதியை பிறப்பிடமாகவும், அராலி வடக்கு நாகேந்திர மடத்தை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவராகிய பிரம்ம ஸ்ரீ சிவகடாட்சக் குருக்கள் முத்துச்சாமி ஐயர் நேற்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகடாட்சக் குருக்கள்— ஞானபூங்கோதை அம்பாள் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சுப்பிரமணிய ஐயரின் (திருக்கணித பஞ்சாங்க கணிதர்) சகோதரரும், காலஞ்சென்ற யோகாம்பிகை அம்மாளின் அன்புக் கணவரும், கனகாம்பிகை அம்மாளின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பிரம்ம ஸ்ரீ இ. சி. இரகுநாதையரின் (வாக்கிய பஞ்சாங்கக் கணிதம்) மைத்துனரும், காலஞ்சென்ற பிரம்ம ஸ்ரீ நாகேந்திரக் குருக்களின் (ஸ்ரீ நடராஜப் பெருமான தேவஸ்தான ஆதீனகர்த்தா) மாமனாரும், சோமஸ்கந்தசர்மா, கிரிஜா, முரளிதரசர்மா, கமலநாதசர்மா, குமுதினி, பிரியதர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அராலி வடக்கு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சோமஸ்கந்தசர்மா
(பேரன்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(26968)

மீனவர் நிவாரணம் மீண்டும் வழங்குமாறு கோரிக்கை

அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஆக. 17

மீனவர் நிவாரணம் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை என்றும், அதனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையம் யாழ். அரசாங்க அதிபரை மகஜர் மூலம் கோரி உள்ளது.

நிவாரணம் இன்றி மீனவர்கள் மிகவும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்றும்—

கடல் வலயம் எடுக்கப்படும் வரையிலானது நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

தீவுப்பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டிருப்பதால் மீனவர் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்க முடியாத நிலை இருந்து வருகிறது.

பாதுகாப்புக் கருதி கரையில் இருந்து 500 யாருக்கு அப்பால் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று கடற்றொழிலாளர் சங்கங்கள் மீனவரை எச்சரித்து வருகின்றன.

இந்த நிலையில் மீனவர்கள் வருவாய் இழந்து பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ)

செய்திக் கொத்து

தும்புத் தொழிற்சாலை

முழங்காவில் அசோக் எழுச்சிக் கிராமத்தில் அமைந்துள்ள குடியேற்றத் திட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலையொன்று அண்மையில் மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கைத்தொழில் பகுதியினரால் திறந்து வைக்கப்பட்டது.

கப்டன் குவேனியின் சகோதரரான திரு. குலேந்திரன், முழங்காவில் உற்பத்திக் குழுத் தலைவர் திரு நவரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க ஆசிரியர் திரு. சந்தியாப்பிள்ளை தும்புத் தொழிற்சாலையை வைபவ ரீதியாக திறந்து வைத்தார். (ச)

பட்டியல் பார்வைக்கு

தென்மராட்சி, ஆக. 17

தென்மராட்சி பிரதேச செயலக கிராம சேவையாளர் பிரிவுகளில் 7ஆவது கட்ட உணவு முத்திரை பெறுபவர்களின் பட்டியல் பொதுமக்களின் பார்வைக்காக பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. [த-117]

பரீட்சையில் முதலிடம்

தென்மராட்சி, ஆக. 17

யாழ். சைவ பரிபாலன சபையால் நடத்தப்பட்ட 1992ஆம் ஆண்டு சைவசமயப் பாடப் பரீட்சையில் ஆறாம் ஆண்டுக்குரிய அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி செல்வி சதாசிவசர்மா மதுநந்தினி பெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். (க-117)

பங்குத்தந்தை நியமனம்

தென்மராட்சி, ஆக. 17

முகமாலை பங்குத் தந்தை அருட் திரு அன்ரனிபாலா அடிகள் கிளிநொச்சி பங்குக்கும்; புதுக்குடியிருப்பு பங்குத் தந்தை அருட்திரு விராலின் அடிகள் முகமாலை பங்குக்கும். அருட்திரு பீற்றர் துரைரத்தினம் மிருசுவில் பங்குக்கும் வேரவில் பங்குத்தந்தை அருட்திரு கருணாரத்தினம் அடிகள் தாளையடி பங்குக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முழங்காவில் பங்குத்தந்தையாக அருட்திரு ஞானரத்தினம் அடிகளும், சாவகச்சேரி பங்குத் தந்தையாக அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். (க-117)

நூல் கொள்வனவு

வடமராட்சி, ஆக 17

வல்வெட்டித்துறை சனசமூக சேவா நிலையம் வாசகர்களின் வசதி கருதி ஒரு தொகுதி புதிய நூல்களை பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் கொள்வனவு செய்துள்ளது. (க-173)

செய்முறை வகுப்புகள்

தென்மராட்சி, ஆக. 17

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் ஆரம்பக் கல்வி அறிவை விருத்தி செய்யும் பொருட்டு கொத்தணி மட்டத்தில் தலா ஒரு பாடசாலையைத் தெரிவு செய்து அவற்றில் செய்முறை வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாக தென்மராட்சி கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் பொ. வீரபத்திரன் தெரிவித்தார். (க-117)

மாதிரிக் கிராமம்

தென்மராட்சி, ஆக. 17

வேரவில் வலைப்பாடுப் பகுதியில் ''சௌந்தரபூமி'' என்னும் மாதிரிக் கிராமமும் திருகுடும்ப கன்னியாஸ்திரிகள் மடமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலைப்பாடுப் பகுதி பங்குத் தந்தை அருட்திரு கருணாரத்தினம் அடிகளால் அமைக்கப்பட்ட இம்மாதிரிக் கிராமத்தில் இப்போது [illegible] குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. (க-117)

குடியரசுத் தின நிகழ்ச்சியில்

ஜெயலலிதாவின் உரையால் 'புதிய அரசியல் சர்ச்சை!

சென்னை, ஆக. 17

நேற்று முன்தினம் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நிகழ்த்திய சுதந்திர தின உரை தொடர்பாக தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி சவால் ஒன்றை விடுத்துள்ளார்.

ஜெயலலிதா சுற்றி வளைத்துப் பேசாமல் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை வெளிப்படையாகக் கூறி விளைவுகளை சந்திக்கட்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் உரை பற்றிய உண்மையைக் கண்டறிந்த பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா தனது உரையில் —

எனது ஆட்சிக்கு எதிரான மத்திய அரசு தொடுத்துள்ள போர் காரணமாக தமிழக மக்களின் நலனுக்கு மத்திய அரசு துரோகம் செய்கிறது. இப்படிப்பட்ட அச்சுறுத்தல்களால் என்னை பணிய வைக்க முடியாது. இந்தப் போக்கு தொடருமானால் அது தேசத்தின் ஒருமைப்பாட்டையே குலைக்கும்—என்று எச்சரித்திருந்தார்.

ராமேஸ்வர மீனவர்களின் நலனுக்காக கச்சதீவை இலங்கையிடம் இருந்து பெற்றுத் தர வேண்டும் என்று அவர் கோரினார். (உ-த)

இன்ஸ்பெக்டரின் பணப்பையை திருடிய சிப்பாய்

இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கொழும்பு - கண்டி ரயிலில் பயணம் செய்த சமயம், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரின் பணப்பையை திருடினாராம்.

கடந்த வியாழன் கண்டிப் பொலிஸார் இச்சிப்பாயைக் கைதுசெய்து கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் இருக்கும்படி சிப்பாய்க்கு நீதிவான் உத்தரவிட்டார். (உ-எ)

வாய்க்கால் வேலை

நாகர்கோவில் தெற்கில் கழிவு நீர் அகற்றும் வாய்க்கால் வெட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன 'ஜனசவிய' திட்டத்தின் கீழ் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரேமா எதிர்ப்பாளர்களுக்கு திட்ட அமைச்சர் பதவிகள்

அண்மையில் ஜனாதிபதி விஜேதுங்கா நியமித்த மூன்று திட்ட அமைச்சர்களில் இருவர், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையில் கையெழுத்திட்ட எம். பிக்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா, ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோரின் கோரிக்கை மீது அப்பிரேரணையில் மேற்படி இருவரும் கையெழுத்திட்டிருந்தனர் என்றும் —

ஐக்கிய தேசியக் கட்சியில் பிரேமா எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்தவர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியின் ஒரு நடவடிக்கையாகவே இந்நியமனங்களை ஜனாதிபதி செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

ஷெல் தாக்குதல்கள்

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 6 மணிக்கு யாழ்நகரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

ஷெல்கள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு அண்மையில் விழுந்து வெடித்தன.

இதே வேளை —

மாதகலில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சில்லாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 12 மணி முதல் ஒரு மணிவரை தம்பாலை, இடைக்காடு, வல்லைப் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. (உ-ச)

மரண அறிவித்தல்

செல்லர் துரையப்பா

[இணுவில்]

இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லர் துரையப்பா நேற்று (16-08-1993) காலமாகிவிட்டார்.

இவர் பார்வதியின் அன்புக் கணவரும், நடராசா (கனடா) வின் அன்புத் தந்தையும், கமலாதேவியின் மாமனாரும், உதயன், தயாரூபி, வசந்தரூபி, திருக்குமரன், அனந்தகுமார் காலஞ்சென்ற சுரேஷ்குமார் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. பார்வதி
(மனைவி)

''கதிர்காம வசந்தம்''
இணுவில் கிழக்கு,
இணுவில்.
[26970]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.